அழிகின்றதாருயிராகின்றதாகுலமேறிடுமா
லிழிகின்றசங்கமிருந்தமுலைமேற்கிடந்தனபீர்
பொழிகின்றகண்ணீர்புலர்ந்ததுவாய்கலைபோனவந்தார்
மொழிகின்றதென்னினிநான்மறைமுக்கண்முறைவனுக்கே............ (ருஉ)

முறைவனைமூப்புக்குநான்மறைக்கும்முதலேழ்கடலந்
துறைவனைச்சூழ்கயிலாயச்சிலம்பனைத்தொன்மைகுன்று
மிறைவனையெண்குணத்தீசனையேத்தினர்சித்தந்தம்பா
லுறைவனைப்பாம்பணையாம்பின்னையென்சொல்லியோதுவதே......... (ருங)

ஓதவனுமமுறையவன்பல்குணமுன்னைவிட்டேன்
போதவன்பின்னேபொருந்தவன்வாழ்க்கைதிருந்தச்சென்று
மாதவமாகிடுமாதவமாவளர்புன்சடையான்
யாதவன்சொன்னதுகொண்டொழியினியாரணங்கே............... (ருச)

ஆரணங்கின்முகமைங்கணையானகமவ்வகத்திற்
றோரணந்தோளவன்றேரகலல்குன்மைக்கண்வந்த
பூரணகும்பமுலையிவைகாணப்புரிசடையெங்
காரணன்றொழுமன்போபகையோகருதியதே........................ (ருரு)

கருதியதொன்றில்லையாயினுங்கேண்மின்கள்காரிகையா
ளொருதினமும்முளளாகவொட்டாதொடுங்காரொடுங்கப்
பொருதநன்மால்விடைப்புண்ணியன்பொங்கிளங்கொன்றையின்னே
தருதிர்நன்றுயிடுந்தாராவிடிற்கொல்லுந்தாழிருளே........................ (ருசு)

இருளார்மிடற்றுவிராப்பகறன்னுல்வளை * மளையாற்
பொருளார்கமழ்கொன்றையான்முல்லைபுற்றரவாடுதலாற்
றெருளார்மதிவிசும்பாற்பௌவந்தெண்புனறுங்குதலா
லருளாற்பலபலவண்ணமுமாலரனுயினனே...... ...................... (ருஎ)

ஆயினவந்தணர் வாய்மையாக்கலைகைவளைகள்
போயினவாணிகர் கண்ணுறுமைந்நீர்முலையிடையே
* பாயினவேள்கைக்*கரபத்திரத்துக்குச்சூத்திரம்போ
லாயினபல்சடையார்க்கன்புபட்டவெம்மாயிழைக்கே................ (ருஅ)

இழையார்வனமுலைவீங்கியிடையிறுகின்றதிற்றுற்
பிழையாணமக்கிவைகட்டுண்கவென்பதுபேச்சுக்கொலாங்
கழையார்கழுக்குன்றவாணனைக்கண்டனைக்காதலித்தாள்
குழையார்செவியொடுகோலக்கயற்கண்கள்கூடியதே.................. (ருகூ)

கூடியதன்னிடத்தானுமையாளிடத்தானையையா
நீடியபல்சடைமேற்றெரிவண்ணமெனப்பணிமின்
பாடியநான்மறைபாய்ந்ததுகூற்றைப்படர்புரஞ்சுட்
டாடியநீறுசெஞ்சாந்திவையாமெம்மையனெனவே............................ (சுo)

அயமேபலியிங்குமாடுளதாணுவோர்குக்கிக்கிடப்
பயமேமொழியும்பசுபதியேறெம்மைப்பாய்ந்திடுமாற்

---

* மளை - ஓர் மிருகம்.
* பாயின - பரவின * கரபத்திரம் - ஈர்வாள்.

இடமாயவெவ்வுயிர்க்குமேகம்பமேயா
ரிடமானார்க்கீய்ந்தவிறைவ—ரிடமாய
வீங்கோய்மலையாரொழிலார்சிராமலையா
ரீங்கோய்மலையாரொமை ... ... ... ... (கசு)

எமையாளவந்தாரிடரானதீர
வெமையாளுமெம்மையிமையோ—ரெமையாளும்
வீதிவிடங்கர்விடமதுண்டகண்டர்விடையூர்
வீதிவிடங்கர்விடையூர்தி ... ... ... ... (கள)

தீயானமேனியனேசெம்பவளக்குன்றமே
தீயானசேராமற்செய்வானே—தீயான
செம்பொற்புரிசைத்திருவாரூராயென்னைச்
செம்பொற்சிவலோகஞ்சேர் ... ...... ...... (கஅ)

சேர்கின்றசிந்தைசிதையாமற்செய்வானே
சேர்கின்றசிந்தைசிதையாமற்—சேர்கின்றோ
மொற்றியூரானேயுறவாருமில்லையினி
யொற்றியூரானேயுறும். ... ... ...... (கக)

உறுமுந்தமுன்னேயுடையாமலின்ன
முறுமுந்தமுன்னேயுடையாம—லுறுமுந்தம்
மோராந்துறைத்துற்றுணர்வோடிருந்தொன்றை
யோராந்துறைக்கவல்லாற்கொன்று ... ......... (க00)

ஒன்றைப்பரணருறைத்தவந்தாதிபல
வொன்றைப்பகரிலொருகோடி—யொன்றைத்
தவிராதுறைப்பார்தளராருலகிற்
றவிரார்சிவலோகந்தான் ... ...... ... (க0க)

திருச்சிற்றம்பலம்.

பரணதேவரருளிச்செய்தசிவபெருமான்றிருவந்தாதிமுற்றும்.

---

திருச்சிற்றம்பலம்.

இளம்பெருமானடிகள்பாடியருளிய

# சிவபெருமான்றிருமும்மணிக்கோவை

---

### அகவற்பா.

முதல்வன்வகுத்தமதலைமாடத்
திடவரையூன்றியகடவுட்பாண்டிற்
பள்ளிச்செம்புயலுள்விழுதுறீஇப்
புத்தேணிவந்தமுத்தமாச்சுட
ரறிவளியெடுப்பினுஞ்சிறுநடுக்குறுநின்
னடிநிழலளியவோவைத்தமுடிமிசை
யிலங்குவளைத்தனிப்போதுவிரித்த
வலங்குகதிரொலியனியணிந்ததென்மாறே. ... (க)

